விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 | தை 20 | ஜ- அவ் 11 | இதழ் 349

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 2 2 1985

## தேசியக்கொடிகள் அபேஸ்!

(மட்டக்களப்பு)

பெருந்தொகையான தேசியக் கொடிகள் இனந்தெரியாத சிலரினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று நண்பகல் மட்டக்களப்பு கச்சேரியில் நடந்தது,

கச்சேரியிலுள்ள மேலதிக அரசாங்க அதிபரின் அறைக்குள் திடீரென நுழைந்த சிலர், அங்கு ஒரு பெட்டிக்குள்ளிருந்த நூற்றுக்கும் அதிகமான தேசியக்கொடிகளை அந்தப் பெட்டியுடன் தூக்கிச் சென்றுவிட்டனர். இதனைத் தொடர்ந்து பல்வேறு திணைக்களங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## எம். ஜி.ஆர். சென்னை திரும்புகிறார்: விசேடபோக்குவரத்துஏற்பாடு

(சென்னை)

நியுயோர்க் புறூக்ளின்மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுக் குணமாகி, எதிர்வரும் திங்கட்கிழமை தாயகம் திரும்பவுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனின் வருகையையொட்டி, விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை பல்லவன் போக்குவரத்துக் கழகம் மேற்கொள்ளவுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந்திரளாகப் பொதுமக்கள் முதலமைச்சரைப் பார்ப்பதற்கு வருகைதரவுள்ளதையொட்டியே இப்போக்குவரத்து ஏற்பாடு மேற்கொள்ளப்பட டுள்ளது. (வெ)

### அடிப்படைத் தேவைகள் இழந்த நிலையில்

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 முகாம்களில் 7,447 அகதிகள்!

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுமார் 16 முகாம்களில் அடிப்படை மனித தேவைகள் கூட இல்லாமல் 7,447 அகதிகள் கஷ்டப்படுவதாக, ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.**

இந்த மகஜரில் 25000 பேர் கையெழுத்திட்டுள்ளார்கள்.

இம்மகஜரின் பிரதிகள் முல்லைத்தீவு இணைப்பு அதிகாரி, இராணுவ தலைமை நிலையம், மாவட்ட அமைச்சர், அரசாங்க அதிபர், அமைச்சர் எஸ். தொண்டமான் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இம்மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது:- "தீவிரவாதிகளின் நடவடிக்கைகளில் எவ்வித தொடர்புமில்லாதஏழைத் தமிழ், முஸ்லிம் மக்களை, பாதுகாப்புப் படையினர் கொக்கிளாய், அலம்பில், கருநாட்டுகேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு, செம்மலை. குமிழமுனை, ஆண்டான்குளம், ஆறுமுகத்தான்குளம், முறிப்பு, தென்னமாவடி ஆகிய கிராமங்களிலிருந்து கடந்த வருடம் டிசம்பர் 21-ம் திகதி வெளியேற்றியுள்ளனர். இதன் காரணமாக மக்கள தங்கள் சொந்தக் கிராமங்களைவிட்டு வெளியேறி முள்ளியவளை, வற்றுப்பளை தண்ணீரூற்று, திராவிபிட்டி, முல்லைத்தீவு, வெட்டுவாய்க்கால் சிலாவத்துறை ஆகிய இடங்களிலுள்ள பாடசாலை' கோயில்களில் அகதிகளாக தங்கியுள்ளனர். இந்தப் பகுதிகள் எங்கள் கிராமங்களிலிருந்து 40 மைல்களுக்கு அப்பால் உள்ளன. ஆதலால் எங்களை பாதுகாப்புடன் சொந்த கிராமங்களுக்கு அனுப்பிவையுங்கள் என்று கோரியுள்ளனர். (க)

## சென்னை தூதரக அதிகாரி திருப்பி அழைக்கப்பட்டார்!

[கொழும்பு]

சென்னையிலுள்ளஇலங்கைத் துணை ஸ்தானிகராலய அதிகாரியான திரு எஸ். அப்பாத்துரை இலங்கைக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

இவரின்புதல்வியொருவர்தமிழீழ விடுதலை இயக்கம் ஒன்றுடன் தொடர்பு வைத்துள்ளது பற்றி அறியப்பட்ட தையடுத்தே இவர்திருப்பியழைக்கப்பட்டாராம்.

திரு. அப்பாத்துரையின் பதவிக்கு திரு. ஸ்ரான்லி ஹெட்டிஆராய்ச்சி என்ற புதிய அதிகாரி சென்னையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை செனையில் புதிய இலங்கை துணைஸ்தானிகராக திரு எஎச் செனிவரத்ன நியக பட்டுளார் (கி)

## படகு அபகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ் கடற்றொழில் பயிற்சிப் பாடசாலையில் நேற்று மாலை படகு ஒன்று அபகரிக்கப்பட்டது.

ஜீப்பிலும் வானிலும் வந்த சிலர், மேற்படிப் பாடசாலையில் பலவந்தமாகப் புகுந்து அங்கிருந்த படகைஅபகரித்து, வானில் கடத்திச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது

## எரிபொருள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெற்றோலியம் கூட்டுத்தாபனக் கிளையில் நேற்றுமுன்தினமிரவு நான்கு பவுசர்களில் எரிபொருள் கொள்ளையடிக்கப்பட்டது.

சம்பவதினம் மலை 6 மணி (4-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க)

## வேர்ணன் வோல்டேர்ஸ் புதிய அமெரிக்க ஐ.நா. தூதுவர்!

### இலங்கை விவகாரங்களில் அதிக ஆர்வங்காட்டியவர்!!

வாஷிங்டன், ஜன. 1

ஐ நா. ஸ்தாபனத்துக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜெனரல் வேர்ணன் வோல்ட்டேர்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி தூதுவர் பதவியிலிருந்தும் திருமதி ஜீன் கேக் பட்றிக் விலகியதையடுத்தே ஜெனரல் வோல்டேர்ஸ் புதிய தூதுவராக நியமிக்கபபட்டுள்ளார்.

ஜெனரல் வேர்ணன்வோல்ட்டேர்ஸ் இரு தடவைகள் இலங்கை விஜயம் செய்திருந்தார். இவர் இலங்கை இனப் பிரச்னை தொடர்பாகவும் இலங்கைத் தலைவர்களுடன் பெருமளவு தொடர்புகொண்டிருந்தார்.

மிகவும் உறுதியாகப் பேசக்கூடியவர் என்று வர்ணிக்கப்படும் இவர், அதிபர் றீகனின் நடமாடும் தூதுவர் என்று குறிப்பிடப்பட்டிருந்தார் (கி)

## கிழக்கில் ஊரடங்கு நீக்கம்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, திருக்கோயில் ஆகியவற்றின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது [கி]

## மட்டக்களப்பு மாணவர் திடீர் பகிஷ்கரிப்பு!

(இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு நகரிலுள்ள பாடசாலைசளில் மாணவர்கள் நேற்று முழுஅளவில் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

திடீரென நடந்த இப்பகிஷ்கரிப்புக்குரிய காரணம் எதுவும் உடனடியாகப் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

மேற்படி பகிஷ்கரிப்பு சம்பந்தமாக மட்டக்களப்பில் உள்ளசிலபிரபல கல்லூரிகளின் மாணவர்கள் சிலர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

## கொள்ளை

[மாவிட்டபுரம்]

லங்கா சீமந்துக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுமார் 9 மணியளவில் ஆயுதங்களுடன்உட்புகுந்த இனந்தெரி (4-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)

## மீண்டும் பத்திரிகை தணிக்கை

**அவசரகாலச்சட்டத்தின் 14வது ஷரத்துப் பிரிவு [1] இன் கீழ் பத்திரிகைத் தணிக்கை மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.**

**தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் கட்டுப்பாடு, மற்றும் அவசிய தேவைப் பொருட்கள் விநியோகம் என்பவற்றுக்குக் குந்தகம் விளைவிக்கும் செய்திகள் உட்டட கலகங்களைத் தூண்டுவது சம்பந்தப்பட்ட செய்திகள், பயங்கரவாதத்தை அடக்குவதற்கு எடுக்கப்படும் செய்திகள் என்பன தணிக்கை செய்யப்பட்டுள்ளன.** (4-ம் பக்கம் 4-ம் கலம் பார்க்க)

### கடத்தப்பட்ட ரெரன்ஸ் சில்வாவின் பெற்றோர்

## "காலில் விழுந்து கேட்கிறோம் மகனை விடுவியுங்கள்"

### 'ஈழநாடு' மூலம் விடுத்துள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ள இரு இன்ஸ்பெக்டர்களில் ஒருவரான ரெரன்ஸ் டி சில்வாவின்பெற்றோரான திரு வில்பிரட் ஜோசப் டி சில்வாவும் திருமதி மேரிமேர்ஸ் டி சில்வாவும் ஈழநாடு மூலமாக தமது மகனை விடுவிக்கும்படி கடத்திய இளைஞர்களுக்கு உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளனர். அதன்விபரம், வருமாறு:

இளைஞர்களே!

இன்ஸ்பெக்டர்கள் இருவரையும் உயிருடன் வைத்திருப்பதற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரெரன்ஸ் எமது மூத்த பிள்ளை, அவர் தமிழ் மாணவர்களுடன் கத்தோலிக்க பாடசாலையில் படித்தவர், நாம் கத்தோலிக்க சமயத்தவர்கள்

இலங்கை பொலிஸ் சேவையில் அவர் 7ஆண்டுகள் பணி புரிந்துள்ளார். அவர் தம்விருப்பத்தின் மீது யாழ்ப்பாணம் செல்லவில்லை. செப்டம்பர் மாதத்தில் அவருக்கு இடமாற்றம் வந்தபோது அதை அவர் மறுத்தார் பின்னர் சுகவீனம் என்று 25 நாட்கள் லீவில் இருந்தார். பின்னர் வேலையிலிருந்து (4-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

## வாடி வீடு பெரும் சேதம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் சின்ன முகத்துவாரம் எனுமிடத்தில் வாடி வீடொன்று பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

## இந்திய கடல் எல்லை பாதுகாப்பு படைப்பிரிவு: நவீனமயமாக்கத் திட்டம்

சென்னை, பெப். 1

இந்திய கடல் எல்லைப்பாதுகாப்புப்படைப்பிரிவை வலுப்படுத்தி நவீனமயமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறல் நடவடிக்கைகள், இந்தியமீனவர்கள்மீதான தாக்குதல்கள் ஆகியவை காரணமாகவே இப்பிரிவு வலுப்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டது

இப்பிரிவுக்கென 9 ரோந்துப் படகுகள் வாங்கப்படவுள்ளது. இப்பிரிவுக்கு கப்பல்கள், விமானங்களை கூடுதலாக வழங்குவதற்கும் திடடமிடப்பட்டுள்ளது.

# விளம்பரம்

## விற்பனைக்கு

ஏசியா சைக்கிள், மேசைமின் விசிறி, டின்னர்செற், டீசெற், பெரிய சூற்கேஸ், பைரெக்ஸ், டிஷ்களும் வேறு பொருட்களும் நியாயமான விலையில் 155, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 1649

---

குப்பிளானில் குரும்பசிட்டி வீதிக்கருகாமையில் 3 பரப்பு வீட்டு/தோட்டக் காணி விற்பனைக்குஉண்டு விபரங்களுக்கு செ. பாலசுப்பிரமணியம், காளி கோவிலடி, குப்பிளான். 1656

---

தெற்குப் புன்னாலைக்கட்டுவன் முச்சந்தியிலிருந்து நீர்வேலிக்குச் செல்லும் வீதியில் இரு கிணறுகளுடன் கூடிய 80 பரப்புத் தோட்டக்காணி உட்பட 180 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாக பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்கட்கு; அ சிவசம்பு விசாலாட்சி வித்தியாசாலை ஒழுங்கை, மல்லாகம். 1635

---

பாவிக்கப்படாத 100 ஒடுகள் விற்பனைக்குஉண்டு தொடர்பு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1520

---

ஆனைக்கோட்டை கொக்குவில் றோட்டில் 11 பரப்புக் காணி வீடு கட்டக்கூடியது. உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கு. ரவீந்திரன், அதிகார் வளவு, ஆனைக் கோட்டை. 1578

---

தெல்லிப்பளை பார்மணியம் ஒழுங்கையில் வீடு கட்டுவதற்கு [3] மூன்று பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரதான ஒழுங்கையிலிருந்து வாகனம் செல்லக்கூடிய பாதையுண்டு. விபரங்கட்கு: ஏ. சோமபாலன், 'தாரகை' கேணிக்கரை, அளவெட்டி. 1581

---

அன்டர்வூட் [Underwood] தட்டச்சுயந்திரம் [ஆங்கில] விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: உருத்திரா, 12/3 அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை. 1619

---

கொக்குவில், பொற்பதி றோட், உடையார் ஒழுங்கையில் 2½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி அ. செல்லையா பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 1637

---

1½ பரப்பு வீடுகட்ட உகந்த வெறுங்காணி பொன்னையா ஒருங்கை ஆனைக்கோட்டையில் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்:- S. ஜெகநாதன் பொன்னையா, [பிடாரி கோவில்] உப-தபாற் கந்தோர் ஒழுங்கை, ஆனைக் கோட்டை. 1638

---

சங்கரத்தை பத்திரகாளி. கோவிலிருந்து நூறுயார் தூரத்தில் 6 பரப்புக்காணி வீடு கட்டக்கூடியது வசதியுடன் விற்பனைக்குண்டு. பாலன் மில்ஸ், மாவடி, வட்டுக்கோட்டை. 1654

---

சொற்பகாலம் பாவித்த சிங்கர் தையல்மெஷின், Ken wood கேக் மிக்சர், Prestige Pressure Cooker, Fidelity Record Player, மற்றும் புதிய நஷனல் மின்சார Automotic Oven, Russed Hobbs, மின்சார கேத்தல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; கமலவாசா, நந்தாவில், கொக்குவில். [சம்பியன்லேன் ஊடாக] 1592

## விற்பனைக்கு

Broilers இறைச்சி கோழிகள் சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்டர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். 1653

---

Toyota K E 20 11 செட்டி, றெகோட் பிலெயர், சோகேஸ் A.C. ஜோஜ் 480, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1652

## தேவை

அனுபவமிக்க கடைச்சாமான் பார்சல் செய்யக் கூடியவர் முன் வேலை செய்த ஸ்தாபன சான்றிதழ் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் சகிதம் 04-02-85 காலை 9-00 மணிக்கு நேரில் வரவும். 104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ராஜாகோப்பிரேசன் நிர்வாகம். 1639

---

14—18 வயதுக்குட்பட்ட ஆண் வேலைக்குத் தேவை யாழ் நகருள், அல்லது அருகில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். மோர்வின்ஸ், 91/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1636

---

தினமும் பாவனையிலுள்ள பொருட்கள் விற்பதற்கு ஓர் விற்பனைப் பிரதிநிதி (Van Sales Representative) தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. மாதம் Rs. 1500/- க்கு மேல் வருமானம் பெற வாய்ப்புண்டு. இரண்டு நடுவர்களின் பெயருடனும், இரண்டு சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும். C/o ஈழநாடு. 1645

---

தறிக்கப்பட்ட இலுப்பை, வேம்பு, நாவல் மற்றும் விறகாகப் பயன்படக்கூடிய மரங்கள், தடிகள், தளபாடங்கள் ஆகியவற்றை விலைக்கு எடுக்கிறோம். விபரங்களுக்கு: 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1522

---

யாழ். நகரில் உள்ள வியாபார ஸ்தாபனமொன்றிற்கு 40 வயதுக்குட்பட்ட விற்பனையாளர் தேவை. ஆங்கிலத்தில் எழுத வாசிக்க தெரிந்தவர் விரும்பத்தக்கது. மின்பொறி உபகரணங்கள் தெரிந்தவராகவும், முன் வேலைசெய்த அனுபவத்துடனும் எழுத்து மூலம் 11- 2- 85க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 1604, C/o, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1604

## சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகியகாலத்தில் Processing And Printing செய்துகொள்ள நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1511

## வகுப்பு

Berlin - பேர்லின் போக எண்ணமா? சிறிதளவு பாஷை தெரிந்திருப்பது நல்லது. German - ஜெர்மன் பாஷை சொல்லிக் கொடுக்கப்படும். S. சொர்ணலிங்கம், இல: 4, கோபால் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [மனோகரா தியேட்டர் அருகில்] 1623

---

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

புங்குடுதீவு-நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கம்.

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர்

### தரம் III

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் 11-02-85 வரை எங்களால் ஏற்றுக்கொள்ளப் படவிருக்கின்றது. விண்ணப்பங்கள் தலைவர், புங்குடுதீவு-நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு என முகவரியிடப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் தரம் 111'' எனக் குறிக்கப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

தகமைகள் பற்றிய விபரங்களுக்கும், வேறு விபரங்களுக்கும் 15009/12ஏ இலக்க 12 5 72-ம் திகதி வர்த்தமானியைப் பார்க்கவும்.

தலைவர்
புங். நயி. ப.நோ.கூ. சங்கம்,
புங்குடுதீவு.

1633

---

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

### நவீனசந்தையில் 1-ம் கட்டத்தில் இரண்டு இரும்புச் சுருக்குக்கேற் திருத்தம் செய்தல், விளம்பரப்பலகை செய்து விநியோகித்தல் ஆகியவற்றுக்கான

## கூறுவிலை அறிவித்தல்

மேற்படி வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1985 ஆம் ஆண்டு மாசி மாதம் 14 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் 12-30 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்படும்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடம் இருந்து 1985ஆம் ஆண்டு மாசி மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஒவ்வொரு கூறுவிலைக்கும் கூறுவிலைப்படிவக் கட்டணமாக ரூபா 50/-ம், கூறுவிலை வைப்புப்பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கூறுவிலையைத் தாங்கிவரும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கூறுவிலையின் விபரம் குறிக்கப்பட்டு ''மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.'' என விலாசமிடப்பட்டு பதிவுத்தபாலிலோ அல்லது இதற்கென ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப்பெட்டியிலோ சேர்க்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

க. தர்மலிங்கம்,
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
31-01-1985. 1640

---

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற வல்வெட்டி கனகசபாபதி பெண் முத்துப்பிள்ளை என்பவரின் மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,
மரணமெய்தியவர்
எதிராக
1. சிவகுருநாதர் விசுவலிங்கம்
2. பெண் மகேஸ்வரி இருவரும்
நந்தாவளை, வல்வெட்டி
வல்வெட்டித்துறை
எதிர்மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1166/T

மனுதார்.
சரவணமுத்து கைம்பெண் சின்னம்மா. சிறீரங்கம், வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ஆம் நாளன்று முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 1ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

(றிச்சேட்
ஜெயராசசிங்கம்)
பதிவாளர்
நீதிமன்றக் கட்டளைப்படி
வரைந்தவர்
செல்வி வி. மகாதேவா
மனுதாரின் சட்டத்தரணி
85-3-8வரை காலம் நீடித்து வழங்கப்பட்டது. 1549

---

## சமய தீட்சை

(வேலணை)

வேலணை மேற்கில் உள்ள குருக்கள் மட ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ கை திருஞானசம்பந்தர் குருக்கள் அவர்கலால் 4-ம்திகதி திங்கள், தைப்பூசத்தில் வரும் சுபவேளையில் சமய தீட்சை சைவச் சிறுர்களுக்கும் சைவப் பொதுமக்களுக்கும் அளிக்கப்படும். அன்று மாலை 4 மணியளவில், திருமுறையோதல் — பண்ணிசை வகுப்பு சிறுவர்களுக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

---

## கேள்விப்பத்திரம் கோரல்

பனங்காமம் பற்று பல நோ. கூட்டுறவுச் சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்ய இருப்பதால் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் மீளளிக்கப்படும் வைப்புப்பணமாக ரூபா 100/ ம் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 25/-ம் செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப் பத்திரத்தைப் பெற்று தலைவர் பனங்காமம் பற்று பல. நோ. கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளம் என்ற முகவரிக்கு ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்புவதுடன் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பொருளின் பெயரை குறிப்பிட்டு 20-2-85க்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

(1) அரிசிஆலைக்கு பாவிக்கக்கூடியது (புதிய) பெட்டி (Packing)

உடைக்கப்பட்ட லிஸ்டர் (Lester) என்ஜின் (Water Cool)

சிலின்டர் (Cylender)—3

குதிரைசக்தி (H. P.) 32500

சுழற்சி (R P.M.) 1500

(2) வெற்றுச்சாக்கு— 1500

(3) பழைய காகிதாதி 150 கிலோவிற்கு மேற்பட்டது

பொருட்களை பார்க்க விரும்புபவர்கள் வேலை நாட்களில் காலை 8-00 மணியில் இருந்து பி. பகல் 5-00 மணிவரை பார்வையிடலாம்.

கூட்டுறவுச்சேவையிலுள்ள
சா. வனஜா
பொதுமுகாமையாளர்.
1634

---

# HOME FINANCE LTD

## ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்

பூகொடை ஆலையில் தயாரித்த நவீன ரக சீத்தை-பப்ளின், வெள்ளை பப்ளின், பிசாமா போன்ற பலரக துணிவகைகள் எங்களிடம் மொத்த விற்பனைக்கு உண்டு. சகாய விலை. விரும்பியோர் உடனே வந்து பார்வையிட்டு தெரிவுசெய்யவும்

NO. 82, KANNATHIDDY ROAD,
JAFFNA.

---

# வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்துகொடுக்கப்படும்.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA.
PHONE: 587855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.
[1596]




## ஆசிரிய ஜோதி

ஆசிரிய ஜோதி திரு. இராசையா திரமலரின் பிரிவு கல்வி உலகிற்குப் பெரும் இழப்பாகும். புனுகலை தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபராக இருந்து கடமையே பெரிதெனச் சேவையாற்றிக் கொண்டிருந்த போது திடீரென மாரடைப்பால உயிர் துறந்தார்.

22 வருடகால ஆசிரிய சேவையில் அவர் உருவாக்கிய முத்துக்கள் கணக்கிலடங்கா பொதுச் சேவையும் ஆசிரிய சேவையும் அவர் இரு கண்கள் என்றும் அவரை அவருடன் பழகிய நெஞ்சங்கள் மறக்கமாட்டா. இன்று சுன்னுகம் சூராவத்தை இல்லத்தில் அன்னுரது 31வது நாள் நினைவஞ்சலி நடக்கிறது. அன்னுரது ஆத்ம சாந்திக்காக நாமெல்லோரும் பிரார்த்திப்போமாக.

- யோகராணி



யாழ்ப்பாணம் தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் வரலாற்றில் மிக அண்மையிலேயே எம்மோடு இணைந்து கொண்டவர் திரு. சரரத்தினம் (சாரதி). ஆனல் திணைக்களத்திலும்சரி திணைக்களத்திற்கு வெளியிலும் சரி அன்பையும் அறிமுகத்தையும் பெற்றுக் கொண்டவர் அவர். யாழ். குடாநாட்டில் எல்லோருமே இவருக்கு அறிமுகமானவர்கள் என்று கூறிவிடலாம்.

'நாங்கள் இருப்பது சில காலம், இறப்பதும் ஒருதரம் தான். அதற்குள் செய்ய வேண்டியதை செய்து விட வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொள்ளும் அவர் தனது வாழ்க்கையையும் அப்படியே முடித்துக் கொண்டார்.

-யாழ். தொலைத்தொடர்பு ஊழியர் நலன்புரிக் கழகம்

**றீகல் மினி**

தினசரி 10-15, 1-15
மட்டும்
மோகன், ராதிகா, நளினி
நடிக்கும்
பாலாஜியின்
**ஓசை**

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-00
சிவாஜி-கே.ஆர்.விஜயா
ரஜனி
**ஜஸ்ரிஸ் கோபிநாத்**

**வெலிங்டன்**
(ராழ் நகர்)
10 30, 2-15.
கமல் - மாதவி
**டிக் டிக் டிக்**
(கலர்)

மஹாபொல பரிசுக்கு

# யாழ். பல்கலைக்கழகமாணவர் செல்ல முடியாத நிலை

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 7-ம் திகதி காலி மாவட்டத்திலுள்ள எல்பிட்டியாவில் நடைபெறவிருக்கும் இந்த ஆண்டுக்கான பட்டதாரி மாணவர்களுக்கு மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சியில் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து இதற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் பெரும்பாலும் அங்குசெல்ல மாட்டார்கள்என்று தெரியவந்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு அங்குசெல்வது பல்வேறு பிரச்னைகளை தோற்றுவிக்கலாம் என்பதாக நம்பப்படுகிறது.

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து இம்முறை 359 பேர் மஹாபொல புலமைப் பரிசிலுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். (சூ)

## யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு வெளிநாடு செல்ல ஓர் அரியசந்தர்ப்பம்

1. பேர்லின் [BERLIN] பிரான்ஸ் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
2. யாழ்ப்பாணத்திலிருந்து உடனடியாக குறைந்த கட்டணத்தில் உங்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும். Air Lanka, Thai Airline இல் பிரயாணம் செய்ய 14,500/- AEROFLOT இல் பிரயாணம் செய்ய 13,500/-
3. யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா செல்லும் வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல ஒழுங்குகளையும் செய்து கொடுப்பார்.
4. கொழும்பில் தங்குமிடவசதி, உணவு, கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா செல்லும் ஒழுங்குகள் காசோலைகள் (Travellers Cheque) இலவசமாக செய்துகொடுக்கப்படும்.
5. மற்றும் Indian Visa Passport, Renewal, Alteration Bonding ஆகியன செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்:

Mrs. SAVITRIDEVI BALASINGAM
Quicks Enterprises,
Travels and Tours,
533, Stanley Road,
Jaffna.

Branch:
SARASWATHY GAREDN,
Church Road,
Chavakachcheri.
T'phone: 273

வாடிக்கையாளர்கள், வியாபாரிகள்

## கவனத்திற்கு!

ஜனவரி மாதம் 1ஆம் திகதி
1985 முதல்

தோலகட்டி தயாரிப்புகளின்
புதிய விலை விபரங்கள்

| பொருட்கள் | மொத்த விலை | ஆகக்கூடிய சில்லறை விலைகள் |
| --- | --- | --- |
| நெல்லிரசம் | 20/- | 22/50 |
| முந்திரிகை ரசம் | 21/50 | 24/50 |
| மேசை வைன் | 42/- | 48/50 |
| மருத்துவ வைன் | 57/- | 63/50 |
| பனம் சிரப் | | |
| நன்னுரி | 26/50 | 27/50 |
| மாதுளம் ரசம் | | |
| ஊறுகாய் (தேசிக்காய்) | | |
| பெரியது | 25- | 29/- |
| ,, சிறியது | 15/- | 18/ |
| ஊறுகாய் (மாங்காய்) | | |
| ,, பெரியது | 25/- | 29/- |
| ,, சிறியது | 15/ | 18/- |
| தேசிக்காய் ரசம் | 25/ | 28/50 |

மேற்கூறிய விலை விபரங்களுக்கு மேல்
வாடிக்கையாளர்கள் செலுத்த வேண்டாமெனக்
கேட்டுக் கொள்கின்ருேம்.

எமது அசல் தயாரிப்புக்களை கவனித்து வாங்கவும்!

போலிகள் ஜாக்கிரதை!

எமது மொத்த விபாபாரிகள்:

ஜோ. எகட்டன், சௌித் மார்க்கட்டிங், யாழ்ப்பாணம்.
செபமாலை தாசர் சபை, தோலகட்டி, வசாவிளான்.
(1629)

## அறிவித்தல்

அரியாலை சனசமூக நிலைய தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான ஒப்பந்தம்.

விண்ணப்பங்கள் 14 - 02 - 85 வரை செயலாளரினல் நேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்துடன் (ரூ 25,000/-ற்கும் குறையாத) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரராக இருக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் மீளப்பெறக்கூடிய தொகையாக ரூபா 250/- செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்கள் (வரைபடம் உட்பட) செயலாளரிடம் நேரில் அறிந்து கொள்ளலாம்.

கட்டட ஒப்பந்த நிபந்தனைகள் வைப்புப்பணம் செலுத்தும்போது தெரிவிக்கப்படும்.

பொதுச் செயலாளர்,
1647 அ. ச. ச. நி., புங்கங்குளம், யாழ்ப்பாணம்.

## பிறந்தநாள் வாழ்த்து
## இராஜநாயகம் ருஜாந்தினி



நுணுவிலைச் சேர்ந்த இராஜநாயகம் இந்திராதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வி ருஜாந்தினி 2-2-85ல் தனது முதலாவது பிறந்தநாளை கொண்டாடுகிருர் இவரை இத்தாலியில் இருக்கும் அப்பா, அம்மா, பெரியப்பா, செல்வம், குமார், குட்டிச் சித்தப்பாமார், அப்பம்மா, அப்பப்பா அம்மம்மா, அம்மப்பா, ஆச்சி, பெரியம்மா, குடும்பத்தினர் மற்றும் மம்மி நல்லூர் மாமி குடும்பத்தினர் பல்கலைகளும்கற்று வாழ்க வென வாழ்த்துகிருர்கள் (1648)

## 1வது ஆண்டு நினைவஞ்சலி
## P. M. S. இராசசிங்கம்

வட்டுக்கோட்டை.



ஓமானில் பொறியியலாளராகக் கடமையாற்றி, அகால மரணமடைந்த எமது இனிய குடும்பத் தலைவர் P. M. S. இராசசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிருேம்.

அன்பு
மனைவி, மகள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்,
மைத்துனிகள்.

வட்டு - மேற்கு, வட்டுக்கோட்டை. (1646)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1933 - 07 - 16



மறைவு
1984 - 01 - 15

### அமரர் ஐ. செல்வசோதி
(பொலிஸ் சார்ஜன்—யாழ்ப்பாணம்)

அன்பின் உருவே அழகின் ஜோதியே
அமைதியின் உறைவிடமே
உங்கள் நினைவு எமக்கு
என்றும் பசுமையாகவே இருக்கும்.

அன்பு மனைவி, அருமைக் குழந்தைகள்,
உற்ருர், உறவினர்.

சுன்னுகம். (1632)

## மணிவாக்கு

தீமை எவர் செய்தாலும் சித்தத்திற்
கொள்ளேம் யாம்
ஆமை போலடக்குவோமார்க்குங் குடியல்லோம்
செய்வோம் சிவபூசை தீங்கவிகள் பாடுவோம்
உய்வோ மிலங்கை நமதூர்.

— சிவயோக சுவாமிகள்.

# நமது நோக்கு

## செய்த பாவம் சொல்லத்தீரும்

இந்தியாவிற்கு சுதந்திரமளித்தேயாக வேண்டுமென்ற ஆணையுடன் வந்தவர் மவுன்ட்பாட்டன்பிரபு. அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் கிளெமென்ட் அட்லி இந்த ஆணையை பிரிட்டிஷ் மன்னன் ஆறும் ஜோர்ஜ் முன்னிலையில் விடுத்திருந்தார்.

அதற்கு முன்னராகஇரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்த போதும், பிரிட்டிஷ் ஆட்சியின் மனப்போக்கு இந்திய சுதந்திரத்தில் நாட்டம் கொள்ளவில்லையென்று தெளிவானதும் ''வெள்ளையனே வெளியேறு'' என்ற பிரேரணையை மகாத்மா காந்தி இந்திய தேசியக் காங்கிரஸில் நிறைவேற்றி வைத்தார்.

பாரதம் பூராகவும் ஒரு புத்துணர்ச்சி, விரக்தியின் அடித்தளத்தைக் கண்ட இந்திய மக்கள் வெற்றியின் ஒளியைக்காண முடிந்தது. நாடு இரண்டாகப் பிளந்து போவது தவிர்க்கமுடியாத நிலை. இந்நிலை இறுகிவிட்ட போதும் அன்னிய ஆட்சியை அகற்ற எல்லோரும் ஒற்றுமைப்பட்டனர்.

இந்திய சுதந்திரம் வீரச் செயலின் விளைவு. நீண்டகால தியாகததின் பரிசு. நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பொசிந்ததே இலங்கைச் சுதந்திரம்.

கத்தியின்றி ரத்தமின்றி தபால் மூலம் கிடைத்த சுதந்திரம்; இந்தியா பறிபோனதும் பிரிட்டனின் சாம்ராச்சிய மேன்மை மறைந்தது; இந்தப்பலவீனத்தில் தனக்காதரவாக எந்தநாட்டையும் நட்பு நாடாகவைத்துக் கொள்ள வேண்டிய பாதுகாப்பு உணர்வு பிரிட்டனுக்கு ஏற்பட்டது.

அணடை நாடாகிய இலங்கை சிறிதென்றாலும் ஆபத்துக்குதவும் நண்பனாக காணப்பட்டது எஜமானுக்கும் அடிமைக்கும் ஏறபட்ட ஒரு ராஜதந்திர நடுநிலைமை திடீரென இலங்கைக்கு சுதந்திரமென்ற பிரகடனத்தை பிறப்பித்தது

பிரிட்டிஷ் தரப்பில் இலங்கை விவகாரங்களில் ஆழம் நீளம் நன்றிந்த சோல்டரி பிரபுவும், இலங்கைக்காக பினபு தேசபிதா என்ற வர்ணனைக்காளான முதற்பிரதமர் டி. எஸ் சேனநாயக்காவும் அவருடைய வலக்கரமாகிய காலஞ்சென்ற பகாதேசாதிபதி ஓ. ஈ குணத்திலக்காவும் நடத்திய சதுரங்க விளையாட்டின் விளைவே இன்று வரைக்கும் பேசப்படும் இலங்கைச் சுதந்திரம்

சோல்பரி அரசியல் அமைப்பும், அதற்குப்பின் அமுலான இலங்கையில் சோஷலிச குடியரசு அரசியலமைப்பும், தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய துன்பங்களைக் கண்டு கவலைப்பட்ட பின்னரே சோல்பரி உயிர்நீத்தார்; தமிழ்மக்களுக்கு இத்தலைவிதி நேரிடடதற்கு தாமும் பொறுப்பென்பதை உணர்ந்து கவலையடைந்தாரென்ற செய்தியும் உண்மையென்று உறுதிப்படுத்தப்பட்டது.

எனவே சுதந்திரத்துக்கு மக்கள் போராட்டம் இன்றியமையாதது. அது இன்றேல் அப்பண்டம் ஒருவித கலப்படம்; இன்று அது உறுதியாய்விட்டது.

இவ்விடயத்தின் உள்ளுடனை உணரமுடியாத உலக நாடுகள் 1983 ஆடிக் கலவரத்துக்குப்பின் இதனை நன்கு உணர்ந்துவிட்டன.

பிரிட்டன், அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் இலங்கையின் தேசிய பிரச்னையை நன்றாய் விளங்கியவை.

இலங்கையின் முதற் பிரதமரான கௌரவ டி. எஸ். சேனநாயக்காவின் வாரிசு, ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய தலைவர் ஜனதிபதி ஜெயவர்த்தனவின் ஆட்சியில் பிரிட்டனே அமெரிக்காவோ எவ்வித துவேஷமும் கொள்ள முடியாது.

பிரிட்டன் விட்டகுறை தொட்டகுறையே இன்றைய தலையங்கமாக நாம் குறி பிடுகின்றோம்.

இலங்கையை ஒருநாடாக ஒற்றை ஆட்சியில் பரிபாலித்த பிரிட்டன் அதனை விட்டு வெளியேறும் போது தமிழ் மக்கள் பிரச்சனை தீவிரமாக விருந்ததை நன்கறியும்; தமிழர் பட்டபாடு என்று அலட்சியம் செய்ததால் இன்று இது தீராவினைபோல தோன்றுகிறது இதற்குப் பிரயாச்சித்தமே இன்று பிரிட்டிஷ் வெளிவகார அமைச்சர் இலங்கை அரசுக்கு போதிக்கும் சுமுகமான முடிவு.

## 878 பேர் விண்ணப்பம்

[சுண்டுக்குளி]

யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 29ம் திகதிவரை கையேற்கப்பட்ட மத்திய கிழக்கிற்கும், சர்வதேச நாடுகளுக்குமாகிய 878 விண்ணப்பங்கள் நேற்று முன்தினம் பதிவுத் தபால் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## இன்று

[யாழ்ப்பாணம்]

காணவாய் வேதாரணியேசுவரர் வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழா இன்று காலை நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்களின் சமயச் சடங்குகளுடன் ஆரம்பமாகும் இவ்வைபவத்தில் யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு.வெ. செ.சுவாமிநாதன், யாழ் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. க. இராசநாயகம், கல்வியதிகாரி திரு வெ. தங்கராசா, உதவிவட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம், கல்வியதிகாரி வெ. சபாநாயகம், உதவி அரசாங்க அதிபர் திரு இ ஐயாத்துரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## பழைய மாணவர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்லூரிகளில் கல்வி வளர்ச்சிக்கு அவசியமான பொருட்கள் சேதப்படுத்தப்படுவதும், மறைவதும் வேதனையளிப்பதாக, யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

கல்லூரியில் இழக்கப்படும் பொருட்களை கல்லூரி மீண்டும் பெற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருப்பதால், அவற்றைத் திருப்பிக்கொடுக்க ஆவன செய்யுமாறு அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (க)

## கொள்ளை....

[1ம் பக்க 3ம்கலத் தொடர்ச்சி]

யாத 4 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி ஒன்று பலகுழாய்களை எடுத்துச் சென்றுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு பணி புரியும் இரு காவலாளிகளை இராணுவத்தினர் அழைத்துச்சென்று விசாரணை நடத்தியபின் விடுவித்துள்ளனர்.

## கடத்தப்பட்ட...

[1ம்பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

விலகவும் விரும்பினர், ஆனல் அப்படிச் செய்தால் இளைப்பாற்றுச்சலுகைகள் எதுவும் கிடைக்காது என்று ஒரு விதியிருக்கின்றது. நாங்கள் பணம் படைத்தவர்களில்லை எனவே தமது 3 மாதக் குழந்தையையும் விடுத்து அவர் பணிக்குச் சென்றார். அவர் தமது திருமணத்தின் போது மாப்பிள்ளைத் தோழனாக ஒரு தமிழரையே தேர்ந்தெடுத்திருந்தார்என்பது தமிழர்களுடன் அவர் எவ்வளவு நட்புடன் இருந்தார் என்பதைக் காட்டும். 1983-ம் ஆண்டு கலவரத்தின்போது பல தமிழ்க் குடும்பங்களுக்கு அவர் உதவி புரிந்துள்ளார்

எனவே இளைஞர்களே, எம்மைத் தவறாகப்புரிந்துகொள்ள வேண்டாம் நம் இப்போது அநேகமாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கிறோம். எமது முழுக் குடும்பமும் கண்ணீரில் கலங்குகின்றது இச்சம்பவததையடுத்து அவருடைய சகோதரி ஒருவர் சுகவீனமுற்றிருக்கிறார். எம்மை எல்லாம் கவனித்து வந்தவர் அவர். அவர் எமக்குத் தெய்வம்போல் இருப்பவர்.

நாம் உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்கிறோம் எமது மகனை விடுவியுங்கள். உங்களை கெஞ்சிக் கேட்பதை தவிர எங்களால் வேறு எதுவும் செய்யக் கூடிய சக்தியில்லை. கடவுள் உங்களை ஆசிர்வதிக்கட்டும்.

## உதவி வைத்திய மாணவர் வகுப்பு

[யாழ்ப்பாணம்]

உதவி வைத்திய மாணவர்களுக்கான வகுப்புகள் திருநெல்வேலியிலும், பருத்தித்துறையிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

கடந்த மாதம் 30ம் திகதி நடைபெறவிருந்த இறுதிவருட மாணவர்களுக்கான சமுதாய, சுகாதாரப்பரீட்சை இமமாதம் 12ம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாக இணைப்பதிகாரி, வைத்தியலாநிதி ந. சிவராஜா தெரிவித்துள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

''உமா மகேஸ்வரன் கைதுசெய்யப்பட்டார்!''

இதுதான் அந்தச் செய்தியின் தலைப்பு.

மேற்படிச் செய்தியில் தெரிவிக்கப்பட்ட விபரங்களின் படி; ''உமாமகேஸ்வரனின் தந்தையும் தாயும் கைதுசெய்யப்பட்டு, பொலிஸ்விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.''

நடந்தது இதுதான்:

நடராஜாவும் மகேஸ்வரியும் சுஹவத்தையைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு சில தினங்களுக்கு முன்னர் ஓர் குழந்தை பிறந்தது குழந்தையின் பலன் எப்படியோ தெரியவில்லை. குழந்தையின் பெயரைப் பதிவுசெய்து கொள்ளச் சென்றபோதுதான்... 'பூதம்' புறப்பட்டது!

மேற்படிப் பெற்றோர் பொலிஸ்நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணை நடந்தது.

''உண்மையைச் சொல்லுங்கள் .. நீங்க உமா மகேஸ்வரனின் சொந்தக்காரர்தானே... ம் ... சொல்லுங்க.. !''

ஐந்து மணி நேரமாக குழந்தையின் பெற்றோர் துருவித் துருவி ஆராயப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டனர்.

விஷயம் இதுதான்; பெற்றோரின் பெயர் நடராஜா மகேஸ்வரி. குழந்தையின் பெயர் உமா மகேஸ்வரன்! பெயரில் வந்த குழப்பம்தான் மேற்படி சம்பவம். இச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, செய்தியை அழகாகப் பெட்டிகட்டி வெளியிட்டு விற்பனையை பரபரப்பாக்கியது 'திவயின' (26-1 85) எனும் சிங்களத் தினசரி.

— ஊடுருவி

## எரிபொருள்..

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

யளவில், கூட்டுத்தாபனகிளைக்கு வந்த இனந்தெரியாதவர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்களை பாதுகாப்பு அறையில் வைத்துப் பூட்டிவிட்டு, இக்கொள்ளையை நடத்தினார்கள் என்று கூறப்படுகிறது.

நான்கு பவுசர்களைக் கொண்டு வந்து 3 பவுசர்களில் பெற்றோலும் ஒரு பவுசரில் டீசலும் நிரப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது. இரவு 12 மணி வரை அங்கு தங்கியிருந்து இக்கொள்ளையை நடத்தினார்களாம்.

## பவுஸர் கடத்தல்

[ஊரெழு]

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான பவுசர் வாகனமொன்று கடத்திச்செல்லப்பட்டது.

## அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை வர்த்தகசம்மேளனத்தின் பொதுசபைக் கூட்டம் அண்மையில் திரு. ஆர். கே. குணரட்ணம் தலைமையில் கூடியபோது சம்மேளனத்தின் தலைவர் திரு. ஆர். அரசரட்ணம் மறைவுக்கு அனுதாபத்தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன் இரு நிமிடங்கள் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது வட பகுதியில் கைத்தொழில்களை எதிர் நோக்கிவரும் பல்வேறு பிரச்னைகள் பற்றியும் உறுப்பினர்கள் நீண்டநேரம் விவாதித்தார்கள்.

உறுப்பினர்களையும் கைத்தொழில்களையும் எதிர்நோக்கும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதென்று முடிவுசெய்யப்பட்டது

சம்மேளனத்தில் சேர்ந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் சம்மேளன செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

## திருப்பலி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

வங்காலைப் பங்குத்தந்தை அருட் திரு. மேரி. பஸ்ரியன் அடிகள் மறைவு குறித்து திருப்பலியும், அஞ்சலியும் வங்காலையில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை எட்டு மணியளவில் வங்காலை புனிதஅருள் ஆலயத்தில் இவை நடைபெறும். மேற்படிவைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வங்காலை புனித அருள் ஆலயப் பங்கு மக்கள் கோரியுள்ளார்.

## மீண்டும் பத்திரிகை...

(1ம் பக்க 4ம் கலத் தொடர்ச்சி)

இச் செய்தித் தணிக்கை விடயங்களுக்குப் பொறுப்பாக ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. பி ஐ. குணதுங்க தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவை தவிரப் பாதுகாப்புப் படைகளின் நடமாட்டம், செயல்பாடுகள் குறித்த செய்திகளும் தணிக்கைக்குள்ளாகின்றன.

பத்திரிகைகளில் ஆசிரியத் தலையங்கங்கள், கட்டுரைகள், ஆசிரியர் கடிதங்கள், கேலிச் சித்திரங்கள், படங்கள் என்பனவும், மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாகத் தணிக்கை செய்யப்பட்டுள்ளன. திரைப் படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பனவும் இத் தணிக்கைக்குள் அடங்குகின்றன. (கி)

## மரண அறிவித்தல்

### சீமாம்பிள்ளை பீற்றர்

மாதகலைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ் பீற்றர் [பீற்றர் மாஸ்டர்] காலமானார். அன்னாரது பூதவுடல் (3-2-1985) ஞாயிறு காலை 8-30 மணிக்கு மாதகல் 'கிறீன்ஷேட்' இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு குடும்பச்சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 1660

ஆபத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.